# அலகுத் தேர்வு - 1

## பதினோராம் வகுப்பு ------ வணிகவியல்

## அலகு – 1. தொழிலின் அடிப்படைக் கூறுகள்

காலம் : 1.15 நிமிடம் மதிப்பெண்கள் : 50

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. வியாபாரம் என்ற சொல்லை, முதன் முதலில் -------- ல் வாழ்ந்த மக்கள் பயன்படுத்தினார்கள்.
   அ) கங்கை சமவெளி ஆ) சிந்து சமவெளி இ) ஹரப்பா
2. தூங்கா நகரம் என அழைக்கப்படும் நகரம் ----------
   அ) காஞ்சிபுரம் ஆ) தஞ்சாவூர் இ) மதுரை
3. அர்த்தசாத்திரம் என்ற புத்தகத்தை எழுதியவர் ----------
   அ) கொளடில்யர் ஆ) சாணக்கியா இ) இளங்கோவடிகள்
4. மருத்துவர் தொழில் என்பது --------
   அ) தொழில் ஆ) சிறப்புத் தொழில் இ) தனியார் வணிகம்
5. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
   அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
   இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்
6. வணிகம் என்பது எதனை உள்ளடக்கியது?
   அ) பொருட்களை அளித்தல் ஆ) பொருட்கள் விலையிடல்
   இ) பொருட்களை கொள்முதல் மற்றும் விற்பனை செய்தல்.
7. நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுகின்ற தொழிற்சாலை -----------
   அ) ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆ) மரபுசார் தொழிற்சாலை இ) கட்டுமானத் தொழிற்சாலை
8. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது -----------
   அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம்
9. கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி செய்வது ------------ ஆகும்.
   அ) வேலை ஆ) வியாபாரம் இ) வணிகம்
10. பொருள்களின் விலைகளைக் குறைத்து வியாபார வளர்ச்சியை பெருக்க வழி வகுத்தவர் -----------
    அ) அலாவுதின் கில்ஜி ஆ) சாணக்கியர் இ) பால்பன்

### பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 12- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. ஆலம்பறை குறிப்பு வரைக.
12. நாளங்காடி என்றால் என்ன?
13. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
14. தொழில் செயல்பாடுகளை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
15. வணிகத்தை வரையறுக்க.
16. தொழில் என்றால் என்ன?
17. வியாபாரம் என்றால் என்ன?

### பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 18- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது?
19. சிறப்புத் தொழில் என்றால் என்ன?
20. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக
21. போக்குவரத்து - சிறுகுறிப்பு வரைக.
22. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
23. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாக கூறப்பட்டுள்ளன யாவை?
24. அதிக மூலதனமும், அதிக அளவு பணியாளர்கள் கொண்ட தொழிலமைப்பு எது? உதாரணம் தருக.

### பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 × 5 = 15

25. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக

    ( அல்லது )

    தொழிலின் சிறப்பியில்புகள் யாவை?
26. வணிகத்திற்கு உறுதுணையானவற்றை சுருக்கமாக விவரி.

    ( அல்லது )

    பொருளாதார செயல்பாடுகளுக்கும் மற்றும் பொருளாதார சார்பற்ற செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.
27. உற்பத்தித் தொழில்களின் வகைகளை அதன் அளவுகளின் அடிப்படையில் விவரி.

    ( அல்லது )

    வட இந்தியாவில் வணிகம் மற்றும் வியாபாரத்தின் வளர்ச்சியை விவரி.

www.Padasalai.Net

# அலகுத் தேர்வு - 2

## பதினோராம் வகுப்பு ------ வணிகவியல்

### அலகு - 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

காலம் : 1.15 நிமிடம் மதிப்பெண்கள் : 50

பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
   அ. தனியாள்வணிகம் ஆ. கூட்டாண்மை இ. கூட்டுறவு சங்கம்
2. தனியாள் வணிகத்தில் மூலதனம் ---------
   அ. வரையறுக்கப்பட்டது ஆ. வரையறை இல்லாதது. இ. விருப்பத்திற்கு உட்பட்டது.
3. கூட்டாண்மை --------- ஆல் பதிவு செய்யப்படுகின்றது.
   அ. நிறுமப் பதிவாளர் ஆ. கூட்டுறவு பதிவாளர் இ. மாவட்ட ஆட்சியர்
4. ---------- சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.
   அ. மிடாக்சரா சட்டம் ஆ. தாயாபாக சட்டம் இ. இந்துச் சட்டம்
5. -------- ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது.
   அ. 2011 ஆ. 2012 இ. 2013
6. நிறுமச் சட்டத்தின் அட்வணை – அ (Table-A) என்பது ----------
   அ. நிகழச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
   இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி.
7. கூட்டுப்பங்கு நிறுமத்திற்கு வரிவிதிப்பு ---------- இருக்கும்.
   அ. குறைவாக ஆ. அதிகமாக இ. நியாமாக
8. கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள் ------------
   அ. யார் வேண்டுமாலும் உறுப்பினர் ஆக முடியாது ஆ. தேர்ந்தடுக்கப்பட வேண்டும்
   இ. யார் வேண்டுமானாலும் இருக்கலாம்
9. பன்னாட்டு நிறுவனங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
   அ. கிளைகள் ஆ. அதன் துணை நிறுவனங்கள் இ. தலைமையகம்
10. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு _______ க்குக் குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
    அ. 75% ஆ. 60% இ. 51%

பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 14- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. கூட்டுறவு வறையறு.
12. தனியாள் வணிகம் வரைவிலக்கணம் தருக.
13. கர்த்தா என்பவர் யார் ?
14. பொதுமக்களுக்குத் தெரியாமல் ஒரு நிறுவனத்தில் கூட்டாளியாக இருப்பவரை எவ்வாறு அழைக்கலாம் ? அவரின் பொறுப்பு யாது ?
15. வரையறு பொறுப்பு என்றால் என்ன ?
16. கூட்டுறவு சங்கங்களுக்கு பல வகை வரிச்சலுகைகளை, அரசு வழங்குவதன் மூலம் அவைகளுக்கு எத்தகைய பயன் ஏற்படுகிறது ?
17. ஒருவர் உணவகம் தொடங்க யாரிடம் அனுமதி பெற வேண்டும் ? மேலும் ( இதனைத் தொடங்க ) சட்டப் பூர்வமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமா ?

பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. தனியாள் வணிகத்தில் வியாபார இரகசியத் தன்மை எப்படிக் காப்பாற்ற இயலும் ?
19. இந்துக் கூட்டுக் குடும்பத்தில் கர்த்தாவின் பொறுப்பை விவரி.
20. அரசு நிறுமம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
21. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார் ?
22. கூட்டுறவு சங்கத்தின் நிதியை எவ்வாறு தவறாக பயன்படுத்த முடியும் ?
23. ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் பன்னாட்டு நிறுமங்களின் பெயர்களை எழுதுக.
24. துறைவாரி நிறுவனங்களின் மேலாளர்கள், அரசு அலுவலர்களாக இருப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 × 5 = 15

25. தனியாள் வணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் ஐந்தினை விவரி.

    ( அல்லது )

    நீதிமன்றத்தின் ஆணையில்லாமல் எச்சூழ்நிலைகளில் ஒரு கூட்டாண்மை கலைக்கப்படுகிறது.
26. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை ? ( ஏதேனும் ஐந்து ).

    ( அல்லது )

    ஏதேனும் ஐந்து வகை கூட்டுறவு சங்கங்களைப் பற்றி விவரி.
27. அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்)

    ( அல்லது )

    பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகளை விவரி.

www.Padasalai.Net